**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.1069/2022**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சின்னசாமி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : பாலு | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(12.05.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது கே.சென்னம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டாஸ்மார்க்கில் சேல்ஸ்மேனாக வேலை செய்து வருகிறேன். கடந்த 11.05.2017ம் தேதி காலை 8 மணிக்கு செங்கபடையில் உள்ள நான் வேலை பார்க்கும் அரசு பாரில் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது என்று எனக்கு தகவல் கிடைத்தது. பின்பு நான் மற்றும் மேற்பார்வையாளர் ரமணன், சேல்ஸ்மேன் சுப்பிரமணி ஆகியோர்கள் சென்று பார்த்தோம். பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது. மேற்பார்வையாளர் காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லி புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சொந்தஊர் கே.சென்னம்பட்டி என்றால் சரிதான். பாரின் உரிமையாளர் சுந்தரபாண்டி தான் தகவல் சொன்னார் என்றால் சரிதான். போலிசார் தனிப்பட்ட முறையில் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.1069/2022**
**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : சுந்தரமூர்த்தி (எ) சுந்தரபாண்டி | Caste | : |
| Father 's Name / Husband Name | : ரங்கசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(12.05.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது செங்கப்படையில் குடியிருந்து வருகிறேன். நான் டெடி எக்ஸ்போர்ட்டில் வேலை செய்து வருகிறேன். கடந்த 10.05.2017ம்தேதி பார் கடையை அடைத்துவிட்டு மறுநாள் காலை 8 மணிக்கு பார் சுத்தம் செய்ய போனேன். அப்போது பாரின் கதவு பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது. உடனே நான் மேற்பார்வையாளருக்கு தகவல் சொன்னேன். அவர்கள் வந்து பார்த்துவிட்டு போலிசாருக்கு தகவல் சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

மேற்பார்வையாளர் தான் போலிசாருக்கு விபரம் சொன்னார்கள் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. போலிசாரும் என்னிடம் தனிப்பட்ட முறையில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**. இல்லை